எடுக்கப்பட்டு, அதற்கான இடங்களை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெங்களூரில் உள்ள மத்திய கடலோர ஆய்வு மைய இயக்குநரால் தல ஆய்வுகள் செய்யப்பட்டு, பின்னர் மீன் வளப் பொறியியல் பிரிவினரால் உத்தேச மதிப்பீடு ரூ.40 கோடிக்குத் தயார் செய்யப்பட்டு, ஆணையாளர் மற்றும் மீன் வளத் துறை இயக்குநரால், பெங்களூரில் உள்ள மத்திய கடலோர ஆய்வு மைய இயக்குநரின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவருடைய கருத்துக்கள் கிடைக்கப்பெற்றதும், கடலின் தன்மையை அறிய, பூண்டி நீரேற்றும் மற்றும் நீரமூழ்த்த மையத்தின்மூலம் மாதிரி ஆய்வு செய்து, அதனடிப்படையில் திட்ட மதிப்பீடு இறுதியாகத் தயார் செய்து, மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, மீன் பிடித் துறைமுகம் கட்டும் கட்டுமானப் பணிகளைத் தொடங்க இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 34, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

34–

பேருந்து முன்பதிவு

***1581–திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் அரசு விரைவுப் பேருந்துகள் முன்பதிவகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து செயல்படும்?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் முன்பதிவகம் ஏற்கெனவே செங்கற்பட்டில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 1

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு நகரிலே விரைவுப் பேருந்தினுடைய முன்பதிவு அலுவலகம் புறவழிச் சாலைகள் இயங்குவதற்கு முன்பாக 24 மணி நேரமும் இயங்கி வந்தது. தற்போது கல்பாக்கம்–பெங்களூர் செல்கிற விரைவுப் பேருந்திற்கு 10 இருக்கைகள் மட்டுமே மாலையிலே முன்பதிவு செய்யப்படுகின்றன. அதேபோன்று, மாலையிலே சென்னையிலேயிருந்து, மதுரை செல்கின்ற ஒரு பேருந்திற்கு மட்டும் 10 டிக்கெட்டுகள் பதிவு செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். இந்த விரைவுப் பேருந்து நிலைய முன்பதிவு அலுவலகம் 24 மணி நேரமும் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து உண்மையானதுதான். அவர் கூறிய கருத்தை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விரைவுப் பேருந்து முன்பதிவு அலுவலகம் அங்கே இருப்பதற்கான முக்கியத்துவம் என்னவென்றால், இந்தப் பகுதி சுற்றுலா தலங்கள் அமைந்திருக்கிற ஒரு பெரிய பகுதியாகும். அதேபோன்று, மறைமலைநகர், மதுராந்தகம் போன்ற பகுதிகளிலேயெல்லாம் மிகப் பெரிய தொழிற் பேட்டைகள் இருக்கின்றன. குறிப்பாக, தென் மாவட்டங்களிலிருந்து வருகிறவர்கள் மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம், திருப்போரூர் மற்றும் கோயில் நகரங்களாக இருக்கின்ற காஞ்சிபுரம், திருத்தணி, திருப்பதி போன்ற நகரங்களுக்குச் செல்கின்ற வழியிலே அந்த நகரம் இருப்பதால், இதை 24 மணி நேரமும் இயங்குகின்ற அலுவலகமாக இயக்குவதற்கு உடனடியாகப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்தேன். அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]